மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# யுவபுரஸ்கார் விருது பெற்ற ‘கானகன்’ புதினத்தில் கானுயிர்களும் கானகமும்

பூ, சுதாகர்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ.கலைஅறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

## முன்னுரை

உலக அளவில் மிகவும் தொன்மையானவர்கள் எனக் கருதக்கூடிய பழங்குடியினர் சிலர் தென்னிந்தியப் பகுதியில் வசிக்கிறார்கள். இவர்கள் இன்றும் காடுகளில் வேட்டையாடிப் பல்வேறு காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வாழக்கூடிய ஆதிகுடியினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டிலும் தொன்மைப் பழங்குடியினராகப் பெரும்பாலான இடங்களில் கண்டறியப்பட்டுள்ள தொதவர், கோத்தர், குறும்பர், இருளர் பணியர், காட்டுநாயக்கர் எனப் பழங்குடி வகையினர் வாழ்கின்றனர் இப்பழங்குடி மக்கள் மலையிலும் காடுகளிலும் தம் வாழ்க்கையைப் பயணிக்கின்றனர் தம் வாழ்வினை மேம்படுத்தும் விதமாக தொழில்முறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகள், சடங்குகள், பொழுதுபோக்குகள் என வாழ்வியலுக்கான முறைகளைப் பகுத்துக்கொள்கின்றனர். இன்று காடுகளில் வாழும் கானுயிர்களும் மனிதனின் சுய நலத்துக்காக சிதைக்கப்படுகின்றது. காடுகள் அழிக்கப்பட்டு அணுஆலைகளும் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன இவ்வடிப்படையில் “கானகன்” புதினத்தில் வெளிப்படுத்தும் விழிப்புணர்வை கீழ் வரும் கட்டுரையில் காணலாம்.

## காடழிப்பு

காடுகளில் விலங்கினங்களும் பறவையினங்களும் இடையூறு இல்லாமல் வாழ்வதற்கு வனவிலங்குகள் குறித்த பாதுகாப்புச் சட்டங்களை அரசு கொண்டு வந்தாலும் காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதும் கொள்ளையடிப்பதும் நடைமுறையில் இருந்துகொண்டே உள்ளன. இந்நிலையை லக்ஷ்மி சரவணக்குமார் தனது “கானகன்” புதினத்திலும் படம்பிடித்துக்

காட்டியிருக்கிறார் காட்டுயிர்களைத் தேவைக்காக வேட்டையாடும் தங்கப்பனும் பொழுதுபோக்கிற்காக வேட்டைக்கு வரும் ஜமீனும் இடம் பெறுகின்றனர். வனமிருகங்களின் நிலங்களை அபகரித்து வேளாண்மை செய்யும் முதலாளிக் கூட்டங்களும் காட்டுயிர் இடங்களில் புதிதாய்த் தோன்றியிருக்கும் பயிர்நிலங்களும் கண்டு விலங்கினங்கள் அச்சத்தையும் அவலத்தையும் கானகன் புதினம் பதிவு செய்கின்றது.

**வேட்டையாடல்**

வேட்டையாடல் முறையை இரு வகையாகப் பிரிக்கலாம் 1.மனிதனின் தேவைக்காக வேட்டையாடல் 2.மிருகங்களின் தேவைக்காக வேட்டையாடல் இவை இரண்டும் வனங்களிலேயே நிகழ்கிறது.

"சுதந்திரத்துக்கு முன்பு பல அரசு அதிகாரிகளும் உள்நாட்டு சிற்றசர்களும் வேட்டைக்கு உரிமம் பெற்றிருந்தனர். அவர்களால் உள்நாட்டுக் கள்ள வேட்டைக்காரர்களை ஓரளவு கட்டுப்பாட்டில் வைக்க முடிந்தது. காலனி ஆட்சி முடிந்ததும் இக்கட்டுப்பாடு தளர்ந்தது. உரிமம் பெற்ற வேட்டைகாரர்களும் கள்ள வேட்டைக்காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு புலிகளையும் மற்ற விலங்குகளையும் தீர்த்துக் கட்டினார்கள்." (இரா.முருகவேள்) என்ற செய்தி மனிதனின் வேட்டையாடலைக் கூறுகிறது. விலங்குகள் உணவு தேவைக்காக மட்டுமே மனிதனை இரையாக்கிவிடும் வேட்டை விலங்குக்கும் மனிதனுக்கும் பொதுவானது. இந்த நிலையை "கானகன்" புதினத்தில் வடிவமைத்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர். ஜமீன் குடும்பம் வேட்டைக்காகக் காடுகளில் செல்லும் பொழுது கண்களில் தெரியும் அனைத்து உயிரினங்களையும் சுட்டு வீழ்த்தினார்கள். அவர்கள் தேவைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் அரிய விலங்குள் கொல்லப்பட்டன.

**அழிந்து வரும் விலங்கினங்கள்**

இந்தியக் காட்டு விலங்குகளின் பாதுகாப்புச் சட்டம் 1972-ல் உள்ள அட்டவனை 1-ன் படி 70 பாலுட்டிகள், 22 ஊர்வன இனங்கள் மற்றும் நிலநீர் வாழும் இனங்கள், 41 பறவை இனங்கள் ஆகியவை அரியனவாகும். அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. நாம் இயற்கையைத் தாக்கினால் இயற்கைத் நன்மைத் திருப்பித் தாக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. அழகிய தோற்றத்தைக் கொண்டியிருக்கும் விலங்கினங்களை இன்னும் பெரிய ஜமின் வீடுகளிலும் வரவேற்பறையிலும் காண முடிகிறது. அதிக எண்ணிக்கையில் விலங்குகள் வேட்டையாடப்படுவதை ஆய்வு அறிக்கை வெளியிடுகிறது. "1972-ல் புலிகள் அழிவதைத் தடுக்கப் புராஜக்ட் டைகர் என்ற திட்டம் செயல்படுத்ப்பட்டது. அப்போது 1827 புலிகள் இருந்தன. இப்போது புலிகளின் எண்ணிக்கை 1411 ஆக குறைந்துவிட்டது". என்ற செய்தி கவலை தருவதாக உள்ளது. இதன் மூலம் மனிதனின் சுயநலத்தால் அழிக்கப்பட்டு வருகின்ற விலங்கினங்கள் போல் மனிதனும் இயற்கையால் அழிக்கப்படுவான் என்பதைக் கருத்தில்கொண்டு செயல்படவேண்டும். எனவே காட்டுவிலங்குகளைப் பற்றி விழிப்புணர்வு அவசியம்.

**செயற்கை உரத்தின் பாதிப்பு**

ஊழவர்கள் வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இரசாயன உரத்தினைப் பல்வேறு இடங்களில் பயன்படுத்தி வருகின்றனர் இந்த இரசாயன உரத்தினால் மண்வளம் பாதிப்பு ஏற்ப்படுகிறது. செயற்கையாகக் கிடைக்கக்கூடிய உரங்களை விளை நிலங்களுக்கு பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவை,

"மூன்றாம் உலகப் போர்" புதினத்தில்" இரண்டாம் உலகப்போர் முடிந்ததில் வெடிகுண்டுக்காரர்களின் சந்தை சரிந்தது....மலடாகிப் போனது மண், விஷமாகிப் போனது உணவு" (வைமுத்து-மூன்றாம் உலகப்போர்-209 ) என்று இராசயன உரத்தின் பிறப்பினைக் குறிப்பிட்டு இந்திய உழவு அழிவுப்பாதைக்குச் சென்ற நிலையை "வைரமுத்து" எடுத்துரைக்கிறார் இதன்முலம் உழவுத்தொழில் செய்பவர்கள் செயற்கை உரத்தைத் தவிர்த்துவிட்டு இயற்கை உரத்தைப் பேண வேண்டும் என்ற கருத்தை உணரமுடிகிறது அதே போல் விளைநிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு செயற்கை முறையான மின் கம்பிகளை அமைக்கும் நிலையை,

"சோளகர் தொட்டி" புதினத்தில் "மின்சார இனைப்பும் பெற்றுக் கிணற்றில் மின்மோட்டர் வைத்து வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி மஞ்சளும் கரும்பும் விதைத்தான் ...பலமுறை மான்கள், பன்றிகள் மின்சாரம் தாக்கி அவனது வேலியில் விழுந்து கிடப்பது அன்றாட நிகழ்வாக இருந்தது" (சா.பாலமுருகன், சோளகர்தொட்டி, பக்-88 )

எனும் கருத்துகளில் இருந்து பயிர்நிலங்களைப் பாதுகாக்கின்ற பேரில் மின் கம்பிகளைப் பயன்படுத்துவது விலங்குகளுக்கான அழிவுகளை உருவாக்குவதாகும். புதுக்கவிதைகளும் நதிகளின் அழிவுகள் குறித்து பதிவு செய்திருக்கின்றன. கவிஞர் அன்பாதவன் "துளிர்கட்டும் பசுமை" என்னும் கவிதையில்,

"தோல் கழிவுகளால் பாலாறு கோளாறாக....
மணல்வாரி கற்பழிக்கத் தென்பெண்ணை கதறியழும்
விவசாய் தொழிலின் சகதியமுக்கில் நொய்யல்
அமராவதி நொடிந்து அழகிழக்கும் அழகரும் நச்சுப்பொய்கையாய்
வைகை மணலோடும் தடம் பார்த்து மனங்குமையும் காவேரி."
(அன்பதாதவன்-நெருப்பில் காய்ச்சிய பறை-பக்-55)

என ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் இதன்மூலம் நதிகளின் மாசுப்பாட்டு நிலையை அறிய முடிகிறது புதினங்களில் நதிக்காக போரடும் மக்களின் சூழலை "ஆத்தங்கரை ஒரம்" புதினம் நமக்கு உணர்த்துகிறது. இதே போல் கானகன் புதினம் கானுயிர்களின் வாழ்வதாரத்தையும் காடுகளின் நிலையையும் நீரின்றி இருக்கும் தன்மையையும் அங்கு வாழும் மக்களீன் துயரத்தையும் எடுத்துரைக்கின்றது.

**தொகுப்புரை**

காடுகள் விலங்குகள் என அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயம் சூழலை மாசுபடுத்தி வருவதற்குக், காரணம் அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சியும் நாகரீகம் தான். இவற்றையே புதினத்தில் முன்வைத்துக் கூறுகின்றார் லக்ஷ்மி சரவணக்குமார். விவசாய நிலங்கள் அனைத்தும் விலை நிலங்களாக மாறிவிட்டன, நதிநீர்கள் அனைத்தும் நஞ்சாய் போய்விட்டன. ஆடு, மாடுகள், விலங்கினங்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் செத்து மடிகின்றன. இதற்குக் காரணம் மனிதன் மட்டுமே என்பதில் ஐயம்யில்லை. ஏனெனில், தான் வழ்வதற்காக பிறரைக் கெடுக்கும் எண்ணம் மனிதனுக்கு மட்டுமே உண்டு. ஆனால் விலங்குகளுக்கு இல்லை. எனவே சூற்றுச்சுழலைப் பற்றிப் பல்வேறு படைப்புகள் வெளிவந்தாலும், புதினங்கள் மட்டுமே சூழலியல் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிவாக எடுத்துரைக்கின்றன.